மோட்டார் வாகன விபத்து கோரிக்கை உரிமை தீர்ப்பாயம்/
முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை :– திருமதி. P. சுதா, B.Com., B.L.,
மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாய நடுவர்
(முதன்மை சார்பு நீதிபதி) மயிலாடுதுறை.

திருவள்ளுவராண்டு 2056, விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 16 ஆம் நாள்
2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ஆம் நாள், திங்கள்கிழமை

**மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாய அசல் மனு எண்.01/2022**

கார்த்திகேயன் .... மனுதாரர்

**//எதிர்//**

1. கண்ணகி, க.பெ. சேட்டு,
2. கிளை மேலாளர்,
   ரிலையன்ஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
   சென்னை. ... எதிர்மனுதாரர்கள்

இம்மனு என் முன்பாக 28.01.2026 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரருக்காக வழக்குரைஞர் திரு.T. சந்திரசேகரன் அவர்கள் ஆஜராகியும், 1 ஆம் எதிர்மனுதாரருக்காக வழக்குரைஞர் திரு.P. அன்புரோஸ் அவர்கள் ஆஜராகி, வக்காலத்து தாக்கல் செய்து, அதன்பின்னர் 1 ஆம் எதிர்மனுதாரருக்காக ஆஜராகாததால் 1 ஆம் எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினர் நிலையில் வைக்கப்பட்டும், 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.R.சேயோன் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் மற்றும் 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் எடுத்துரைக்கப்பட்ட வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்றைய தினம் இந்நீதிமன்றம் வழங்கும்....

**உத்தரவு**

இம்மனு மோட்டார் வாகனச் சட்டப்பிரிவு 166 ன் கீழ் மனுதாரர் கார்த்திகேயன், வயது 54, த.பெ.சம்பந்தமூர்த்தி என்பவர் சாலை விபத்தில்

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.30 19:56:09 +0530

கொடுங்காயம் அடைந்ததற்கு இழப்பீடாக ரூ.60,00,000/-ம் (ரூபாய். அறுபது இலட்சம் மட்டும்) மனுதாக்கலான தேதியிலிருந்து நஷ்டயீட்டுத் தொகை செலுத்தும் வரைக்கும் வட்டியுடன் சேர்த்து 1, 2 எதிர்மனுதாரர்களிடமிருந்து பெற்றுத் தரக்கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனு முதலில் மாண்புமிகு மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்றத்தில் 17.12.2021 அன்று தாக்கல் செய்யப்பட்டு, அங்கு 06.01.2022 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அதன் பிறகு மாண்புமிகு நாகப்பட்டினம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்ற உத்தரவு எண்.1/2020, நாள் 02.01.2020 தேதியிட்ட உத்தரவுப்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு 21.01.2022 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

<u>02. மனுதாரர் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம் :-</u>

i) கடந்த 25.01.2021 ஆம் தேதி காலை 9.15 மணியளவில் மனுதாரர் பணிக்கு செல்ல திருமங்கலம் குத்தாலம் சாலையில் அவருக்கு சொந்தமான TN 82 H 2177 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தில் தலைகவசத்துடன் வடக்கு திசையிலிருந்து தெற்கு பக்கம் சாலையின் இடது புறம் ஓரமாக மெதுவாக சென்று கொண்டிருந்தபோது செண்பகச்சேரி கிராமத்தில் கட்டளைச்சேரி வாய்க்கால் மதகு அருகில் சென்ற போது அதே திசையில் அவருக்கு பின்னர் வந்த நான்கு சக்கர வாகன TN 85 BB 3411 என்ற பதிவு எண் கொண்ட டாடா ஏஸ் வாகனத்தினை சுமன் என்பவர் ஒலி ஏதும் எழுப்பாமலும், அதிவேகமாகவும், முரட்டுத்தனதமாகவும் ஒட்டி வந்து, முனால் சென்று கொண்டிருந்த மனுதாரரின் இரு சக்கர வாகனத்தின் மீது மோதியதில் மனுதாரர் தூக்கி எறியப்பட்டு மனுதாரருக்கு 1. Intraparenchymal hematoma with surrounding edema in left frontal lobe, 2. Tiny petechial hemorrhagi contusions in left mesial temporal lobe, 3. Subarachnoid hemorrhage in left cerebral sulci, 4. Subarachnoid hemorrhage in right fronto parietal sulci, 5. Bleed in both lateral ventricles & basal cisterns 6. Bleed in interhemispheric fissure & bilateral tentorial regions. 7. Subdural hemorrhage in left fronto-temporo-parietal convexity. 8. Bleed in both lateral ventricles, & basal cisterns, 9. Subcentrimetric hemangioma in left lobe of liver, 10. Multiple serious abrasions all over the

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.30 19:56:18 +0530

body ஆகிய காயங்கள் ஏற்பட்டு, மனுதாரரின் சகோதரர் ராஜசேகர் மற்றும் மனுதாரரின் மகன் சூரியமூர்த்தி ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று, உயிருக்கு போராடிக் கொண்டு மயங்கிய நிலையில் இருந்த மனுதாரரை அங்கிருந்தவர்கள் உதவியுடன் குத்தாலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று, அங்கு முதல் உதவி சிகிச்சை பெற்று பின்னர், தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனைக்கு கொண்டு சென்று அங்கு மனுதாரர் 25.1.2021 முதல் 17.2.2021 வரை உள்நோயாளியாக அனுமதிக்கப் பட்டு தீவிர சிகிச்சை பெற்றதாகவும், உடல் நிலை மோசமானதால் அவரை mechanical ventilator வைத்து சிகிச்சை செய்து 27.1.2021 அன்று அறுவை சிகிச்சை செய்து காப்பாற்றியதாகவும், அதன்பின்னர் இன்றுவரை 10 நாட்களுக்கு ஒரு முறை அந்த மருத்துவமனை சென்று வெளி நோயாளியாக சிகிச்சை பெற்று வருவதாகவும், மருத்துவ செலவாக இதுவரை சுமார் ரூபாய்.15,00,000/- வரை செலவாகி உள்ளதாகவும், மனுதாரருக்கு ஏற்பட்ட தலைக்காயம் மற்றும் பிற காயங்களுக்கு உரிய அறுவை சிகிச்சை அளித்த போதிலும் இன்னும் அவர் தனியாக நடந்து செல்ல இயலவில்லை என்றும், பிறர் உதவியின்றி நடமாட இயலாத நிலையில் உள்ளதாகவும், இன்று வரை அரசு பணிக்கு சென்று அவரது பணியினை செய்ய இயலாத நிலையில் உள்ளதாகவும், மனுதாரருக்கு இந்த விபத்தின் மூலம் நிரந்தர ஊனமும், வருமான இழப்பும் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ii) மனுதாருக்கு விபத்தின் போது 54 வயது என்றும், அவர் அரசு பணியின் மூலம் மாதம் ரூபாய்.74,458/-சம்பளமாக பெற்று வந்தார் என்றும், சொந்தமாக சாகுபடி செய்து, சராசரியாக மாதம் ரூபாய்.5000/-வரை வருமானம் ஈட்டி தனது குடும்பத்தினை காப்பாற்றி வந்ததாகவும், அவருக்கு திருமண வயதில் வாரிசுகள் உள்ளதாகவும், இவரது குடும்பத்தில் வருமானம் ஈட்டக் கூடிய வேறு நபர்கள் யாரும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

iii) விபத்து சம்மந்தமாக மனுதாரரின் சகோதரர் ராஜசேகரன் கொடுத்த புகாரின் அடிப்படையில் குத்தாலம் காவல் நிலையத்தில் கு.எண்.96/, பிரிவுகள் 279, 337 இதச படி வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

iv) இந்த விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள கொடுங்காயங்கள்,

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.30 19:56:27 +0530

மருத்துவ செலவுகள், போக்குவரத்து செலவுகள், வலி, துன்பம், கூடுதல் சத்துணவு, நிரந்தர ஊனம், எதிர்கால மருத்துவ சிகிச்சை, வருமான இழப்பு ஆகியவற்றிற்காக மோட்டார் வாகன விபத்து நஷ்ட ஈடாக ரூ.60,00,000/–கோரி மனு தாக்கல் செய்துள்ளதாகவும், விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் உரிமையாளர் 1ஆம் எதிர்மனுதாரர், அவ்வாகனத்தின் காப்பீட்டு நிறுவனம் 2ஆம் எதிர்மனுதாரர் ஆவார், எனவே மனுதாரர் கோரியுள்ள நஷ்ட ஈட்டுத் தொகையை 1, 2 எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ அல்லது தனித்தனியாகவோ கொடுக்க கடமைப்பட்டுள்ளார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

<u>3. 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :–</u>

மனுதாரரால் ரூ.60,00,000/– (ரூபாய். அறுபது லட்சம் மட்டும்) இழப்பீட்டுத் தொகை கோரி தாக்கல் செய்துள்ள இம்மனு ஏற்கத்தக்கதல்ல, தள்ளுபடி செய்யப்பட தக்கது என்றும், மனுவில் காணப்படும் அனைத்து குற்றச்சாட்டுகளையும் மறுப்பதாகவும், 2ஆம் எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்ட மற்ற குற்றச்சாட்டுகளுக்கு மனுதாரர் ஆதாரங்களை வழங்க வேண்டும் என்றும், மனுதாரர் கூறுவது போல் TN 05 BB 3411 என்ற டாடா ஏஸ் வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவால் இவ்விபத்து ஏற்படவில்லை, மேற்படி TN 05 BB 3411 டாடா ஏஸ் வாகனத்தின் ஓட்டுநரிடம் விபத்து நடந்த நேரத்தில் செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் இல்லை மற்றும் செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனம் ஓட்டுவது கொள்கை மீறலாகும், அதற்காக வாகனத்தின் உரிமையாளரான முதல் எதிர்மனுதாரர் மட்டுமே மனுதாரருக்கு இழப்பீடு வழங்கப் பொறுப்பாவார், குற்றம் சாட்டப்பட்ட TN 05 BB 3411 வாகனத்தின் MVI ஆய்வு அறிக்கையில் மேற்படி டாடா ஏஸ் வாகன ஓட்டுநருக்கு ஓட்டுனர் உரிமம் (DL) இல்லாமல், CR வழங்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது, டாடா ஏஸ் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் சுமன் என்பவருக்கு 16 வயது கூட நிரம்பவில்லை, அவர் வாகனத்தை ஓட்டுவதற்கோ அல்லது ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கோ தகுதி பெற்றிருக்கவில்லை, இந்த விபத்து, முதல் எதிமனுதாரரின் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை, மாறாக, விபத்து நடந்த நேரத்தில் TN 82 H 2177 என்ற இருசக்கர வாகனத்தை

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.30 19:56:34 +0530

ஓட்டிய மனுதாரரின் கவனக்குறைவு, அஜாக்கிரதை மற்றும் அதிவேகத்தால் இவ்விபத்து நிகழ்ந்துள்ளது, உண்மையில், விபத்து நடந்த நேரத்தில் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் அவரிடம் இல்லை, மேலும் அவரது வாகனம் காப்பீடு செய்யப்படாமலும் இருந்தது, இருசக்கர வாகனம் ஓட்டுவதில் அவருக்கு இருந்த அனுபவமின்மையே இந்த விபத்துக்கு முக்கியக் காரணமாகும், குத்தாலம் காவல்துறை, உண்மைகளை ஆராயாமல் முதல் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் மீது முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்துள்ளது, மனுதாரர் முதல் எதிர்மனுதாரரின் வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவை நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளார், மனுதாரர் பயணித்த வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டாளர் ஆகிய அவசியமான தரப்பினரை வழக்கில் சேர்க்காததால் இந்த மனு செல்லாது, இரண்டு வாகனங்கள் மோதிக்கொண்ட வழக்கில், முறையான தீர்ப்புக்காக இரு வாகனங்களின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டாளர் ஆகிய இரு தரப்பினரும் வழக்கில் சேர்க்கப்பட வேண்டும், உரிய தரப்பினரை வழக்கில் சேர்க்காதது மனுதாரரின் வழக்கிற்குப் பாதகமானது, விபத்து நடந்த நேரத்தில் TN 05 BB 3411 டாடா ஏஸ் வாகனம் 2 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்பதையும், மேற்கூறிய வாகனத்தின் ஓட்டுநரிடம் வாகனத்தை ஓட்டுவதற்கான செல்லுபடியாகும் உரிமம் இருந்தது என்பதையும் மனுதாரர் நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளார், 2 ஆம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டிருந்தாலும், அது எப்போதும் காப்பீட்டுக் கொள்கையின் சில விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது என்பதால், 2 ஆம் எதிர்மனுதாரர் எந்தவொரு இழப்பீட்டிற்கும் பொறுப்பாகமாட்டார் என்றும், விபத்து நடந்த நாளன்று சாலையில் இயக்குவதற்கு அந்த வாகனத்திடம் செல்லுபடியாகும் ஆர்.சி., ஐ.சி., எஃப்.சி., போன்றவை இருந்தன என்பதை மறுப்பதாகவும், வாகனத்தின் உரிமையாளரான முதல் எதிர்மனுதாரர் ஒத்துழைக்காமல் இருப்பதாகவும், எனவே, பிரிவு 170-இன் கீழ் காப்பீடு செய்யப்பட்டவருக்குக் கிடைக்கக்கூடிய சட்டரீதியான வாதங்கள் அனைத்தையும், 2 ஆம் எதிர்மனுதாரர் முன்வைக்க அனுமதியளிக்க வேண்டும் என்றும், முதல் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் மட்டுமே விபத்து நிகழ்ந்தது என்பதை மனுதாரர் நிரூபிக்கக் கடமைப்பட்டு

SUDHA P
Digitally signed by SUDHA P
Date: 2026.03.30 19:56:41 +0530

உள்ளதாகவும், மனுதாரருக்கு 54 வயது என்பதை நிரூபிக்க எந்தவொரு சாட்சியத்தையும் சமர்ப்பிக்கவில்லை என்றும், மனுதாரர் தனது வயதை நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளதாகவும், மேலும், மனுதாரர் குத்தாலம் ஒன்றிய அலுவலகத்தில் ஓட்டுநராகப் பணிபுரிந்து, மாதம் ரூ.74,458/- ஈட்டி வருவதாக மனுவில் கூறப்பட்டுள்ள கூற்று உண்மையல்ல, இதனை நிரூபிக்க எந்தவொரு ஆவணச் சாட்சியமும் சமர்ப்பிக்கப்படவில்லை, மனுதாரர் நல்ல உடல்நலத்துடனும் ஆரோக்கியத்துடனும் இருந்தார் என்பது உண்மையல்ல, அவருக்கு நிலையான வருவாய் ஈட்டும் திறன் ஏதும் இல்லை, தனது தொழில் மற்றும் வருமானத்தை நிரூபிக்க மனுதாரர் எந்தவொரு ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை, மனுதாரர் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது 'டாடா ஏஸ்' (Tata Ace) வாகனம் மோதி மனுதாரருக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டு, குத்தாலம் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சையும், பின்னர் தஞ்சாவூர் மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் உள்நோயாளியாகச் சிகிச்சையும் பெற்றார் என்பதையும் மறுப்பதாகவும், மனுதாரரே போதிய கவனக்குறைவின் காரணமாக விபத்தை ஏற்படுத்திக் கொண்டதாக தெரியவருவதாகவும், Contributory Negligence எனும் கோட்பாடு இவ்வழக்கிற்கு முழுமையாகப் பொருந்தும், ரூ.60,00,000/- மனுதாரர் இழப்பீடாகக் கோரியுள்ளார் இக்கோரிக்கை ஏற்கத்தக்கவை அல்ல, மனுவில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தையும், முறையான வாய்மொழி மற்றும் ஆவணச் சாட்சியங்கள் வாயிலாக நிரூபிக்க மனுதாரர் கடமைப்பட்டுள்ளார் என்றும், மனுதாரர் தனது காயங்களின் தன்மையையும், அவருக்கு ஏற்பட்டதாகக் கூறப்படும் ஊனத்தின் அளவையும் மிகைப்படுத்திக் காட்டியுள்ளார் என்றும், 2 ஆம் எதிர்மனுதாரருக்கு கிடைத்துள்ள தகவல்களின்படி மனுதாரருக்கு மிக லேசான சிராய்ப்பு மட்டுமே ஏற்பட்டுள்ளது, இதற்கு எவ்வித சிகிச்சையும் தேவைப்படாது, முறையான மருத்துவ மற்றும் ஆவணச் சான்றுகளின் வாயிலாக நிரூபிக்க வேண்டிய கடமை மனுதாரருக்கு உள்ளது, மேலும், மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் சமீபத்திய தீர்ப்பின்படி மனுதாரருக்கு வட்டி கோருவதற்கான உரிமையே இல்லை, அவ்வாறிருக்கையில், 12% என்ற மிக அதிகப்படியான விகிதத்தில் வட்டி கோருவதற்கு அவருக்குச் உரிமையில்லை, உச்ச நீதிமன்றத்தின் அத்தீர்ப்பின்படி, மனுதாரர் அதிகபட்சமாக 6%

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.30 19:56:49 +0530

மட்டுமே வட்டியாகக் கோர முடியும், எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**04**. 1ஆம் எதிர்மனுதாரருக்காக வழக்குரைஞர் திரு.P. அன்புரோஸ் அவர்கள் ஆஜராகி, வக்காலத்து தாக்கல் செய்து, அதன்பின்னர் 1ஆம் எதிர்மனுதாரருக்காக ஆஜராகாததால் 1ஆம் எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினர் நிலையில் வைக்கப்பட்டுள்ளார்.

**05. இந்த மனுவில் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனைகள் :–**

1. இந்த விபத்து யாருடைய கவனக்குறைவின் காரணமாக ஏற்பட்டது?
2. மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் யார்?
3. மனுதாரருக்கு கிடைக்கத்தக்க இழப்பீட்டுத் தொகை எவ்வளவு?
4. மனுதாரருக்கு கிடைக்கத்தக்க வேறு பரிகாரம் என்ன?

**06.** இம்மனு விசாரணையின் போது மனுவின் மனுதாரர் கார்த்திகேயன் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். ம.சா.1ன் மூலம் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலக தட்டச்சர் அலமேலுமங்கை எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். எ.ம.சா.1ன் மூலம் சா.சா.ஆ.1 மற்றும் சா.சா.ஆ.2 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் அந்நிறுவனத்தின் சட்ட மேலாளர் எ.ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். எ.ம.சா.2ன் மூலம் எ.ம.சா.ஆ1 முதல் எ.ம.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது. மருத்துவ குழுவால் வழங்கப்பட்ட ஊனச்சான்று நீதிமன்ற ஆவணம் நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில், 1ஆம் எதிர்மனுதாரருக்காக வாதம் செய்ய வேண்டி, தனியாக மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 170ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.30 19:56:56 +0530

**07. பிரச்சனை எண்.1 :–**

i) வழக்கு விசாரணையின் போது இம்மனுவின் மனுதாரர் கார்த்திகேயன் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மனுச் சங்கதிகளை ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளார். ம.சா.1 ன் மூலம் முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1, விபத்து பதிவேடு ம.சா.ஆ 2, விடுப்பு சான்று ம.சா.ஆ.3, பதிவு புத்தகம் ம.சா.ஆ.4, வாகன காப்பீடு சான்றிட்ட நகல் ம.சா.ஆ.5, மருத்துவ ரசீதுகள் ம.சா.ஆ.6, வங்கி கணக்கு புத்தகம் மற்றும் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது ம.சா.ஆ.7 மற்றும் ம.சா.ஆ.8, மனுதாரரின் ஊதிய சீட்டு 2021 செப்டம்பர் மாதத்தின் கணினி நகல் ம.சா.ஆ.9 ஆகிய ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது. ம.சா.1 மனுப்படி தீர்ப்பாக வேண்டியுள்ளார். ம.சா.1 யை குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது டாடா ஏஸ் வாகனத்தை ஓட்டியவர் 18 வயதிற்கு கீழ் உள்ள நபர் என்றும், ***குத்தாலம் பஞ்சாயத்து யூனியனில் ஓட்டுநராக நிரந்தர வேலையில் பணியாற்றி வருகிறேன், பணிகாலத்தில் மருத்துவ விடுப்பு 2 ஆண்டுகள் ஊதியத்தோடு உண்டு என்றால் சரிதான், மருத்துவ விடுப்பு எடுத்த நாட்களுக்கு ஊதியம் பெற்றுள்ளதால் வருமான இழப்பு இல்லை என்றால் சரிதான்*** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலக தட்டசர் அலமேலு மங்கை எ.ம.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். வழக்கு சம்பந்தமாக சாட்சியம் அளிக்க அவரது மேலதிகாரி அவருக்கு அனுமதிக் கடிதம் வழங்கியதாகவும், ***குத்தாலம் காவல் நிலைய குற்ற எண். 96/2021 வழக்கில் தொடர்புடைய TN 05 BB 3411 என்ற வாகனத்தை ஓட்டிச் சென்ற ஓட்டுனர் சுமன் என்பவருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுனர் உரிமம் இல்லை, அதற்காக அவருக்கு குற்ற அறிக்கை வழங்கப்பட்டுள்ளது*** என சாட்சியம் அளித்துள்ளார். அனுமதி கடிதம் சா.சா.ஆ.1 ஆகவும், மேற்படி வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை சா.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

iii) 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் அந்நிறுவனத்தின் சட்ட மேலாளர் உதயசூரியன் எ.ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் 1 ஆம்

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.30 19:57:03 +0530

எதிர்மனுதாரருக்கு சொந்தமான ***TN 05 BB 3411 என்ற வாகனத்தை ஓட்டிச் சென்ற ஓட்டுனர் சுமன் என்பவருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுனர் உரிமம் இல்லை, அதற்காக அவருக்கு குற்ற அறிக்கை வழங்கப்பட்டுள்ளது, மேற்கண்ட விபரம் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது, வாகனத்தை ஓட்டிச்சென்ற ஓட்டுனர் சுமன் 16 வயது இளவர், ஓட்டுனர் உரிமம் இல்லாமல் இளவர் வாகனத்தை இயக்கியது காப்பீட்டு விதிமீறல் என்பதால் வாகனத்தின் 1 ஆம் எதிர்மனுதாரர் தான் நஷ்டயீடு கொடுக்கவேண்டும்*** என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல் எ.ம.சா.ஆ.1 ஆகவும், பாலிசி மற்றும் சட்டத்திட்டங்களின் நகல் எ.ம.சா.ஆ.2 ஆகவும், ஓட்டுனர் சுமனின் ஆதார் அடையாள அட்டை நகல் எ.ம.சா.ஆ 3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

iv) எனவே, ம.சா.1 ன் சாட்சியம் வாக்குமூலம் மற்றும் ம.சா.ஆ.1 முதல்தகவல் அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது, இம்மனுவில் கண்ட விபத்தானது முதல் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான TN 05 BB 3411 என்ற பதிவு எண் கொண்ட டாடா ஏஸ் வாகனத்தினை ஓட்டிச் சென்ற அதன் ஓட்டுனர் சுமன் என்பவர் ஒலி ஏதும் எழுப்பாமலும், அதிவேகமாகவும், முரட்டுத்தனதமாகவும் ஒட்டி வந்து, முன்னால் சென்று கொண்டிருந்த மனுதாரரின் இரு சக்கர வாகனத்தின் மீது மோதியதால் தான் இவ்வழக்கு விபத்து ஏற்பட்டது என்று மனுதாரர் அவரது மனுவிலும் சாட்சியத்திலும் தெளிவாக சொல்லியுள்ளார். ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையும் முதல் எதிர்மனுதாரரின் ஓட்டுனர் சுமன் என்பவர் மீது தான் போடப்பட்டுள்ளது என்பது ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையிலிருந்தும் தெளிவாக தெரியவருகிறது,

v) எனவே, மேற்படி மனு, எதிருரை, ம.சா.1, எ.ம.சா.1 மற்றும் எ.ம.சா.2 ஆகிய சாட்சியங்களிலிருந்து முதல் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான வாகனத்தை விபத்தின் போது ஓட்டிய அதன் ஓட்டுனர் ஒலி ஏதும் எழுப்பாமலும், அதிவேகமாகவும், முரட்டுத்தனதமாகவும் ஒட்டி வந்து, முன்னால் சென்று கொண்டிருந்த மனுதாரரின் இரு சக்கர வாகனத்தின் மீது மோதியதால் தான் இவ்வழக்கு விபத்து ஏற்பட்டு, மேற்படி விபத்தின் காரணமாகத்தான் மனுதாரருக்கு

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.30 19:57:11 +0530

மனுவில் சொல்லியுள்ள காயங்கள் ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாக தெரியவருகிறது என்றே பிரச்சனை எண்.1 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**08. பிரச்சனை எண்.2 :–**

i) ஏற்கனவே பிரச்சனை எண்.1 க்கு விபத்தானது முதல் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான TN 05 BB 3411 என்ற பதிவு எண் கொண்ட டாடா ஏஸ் வாகனத்தினை ஓட்டிச் சென்ற அதன் ஓட்டுனர் சுமன் என்பவர் ஒலி ஏதும் எழுப்பாமலும், அதிவேகமாகவும், முரட்டுத்தனதமாகவும் ஒட்டி வந்து, முன்னால் சென்று கொண்டிருந்த மனுதாரரின் இரு சக்கர வாகனத்தின் மீது மோதியதால் தான் இவ்வழக்கு விபத்து ஏற்பட்டது என்று தீர்வு காணப்பட்டுள்ளது.

ii) மேற்படி வாகனம் விபத்து காலத்தில் 2 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்திடம் காப்பீடு செய்யப்பட்டு, அக்காப்பீடு நிலுவையில் இருந்துள்ளது என்பதை நிரூபிக்க காப்பீட்டின் நகல் மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.5 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ம.சா.ஆ.5 ஆவணத்திலிருந்து பார்க்கும் போது 1 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்திற்கு 28.07.2020 – 27.07.2021 வரை இன்சூரன்ஸ் நிலுவையில் இருந்துள்ளது என்பதும் இக்கால இடைவெளியில் அதாவது 25.01.2021 ஆம் தேதி தான் மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டுள்ளது என்பதும் ம.சா.ஆ.5 ஆவணத்தின் மூலமும், ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் இருந்தும் தெளிவாக தெரியவருகிறது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

iii) மேலும், எ.ம.சா.1 மற்றும் எ.ம.சா.2 ன் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சா.சா.ஆ.2 மற்றும் எ.ம.சா.ஆ.1 ஆவணங்களின் படியும், எ.ம.சா.1 மற்றும் எ.ம.சா.2 ன் சாட்சியங்களின் அடிப்படையில் எதிர்மனுதாரர் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது போல் 1 ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தினை விபத்தின் போது ஓட்டிய அதன் ஓட்டுனர் சுமன் என்பவருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்பது தெளிவாக தெரியவருகிறது. மேலும், மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் படி விபத்து வாகனம் மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டபோது மேற்படி வாகனத்தின் ஓட்டுனர் உரிமம் குறித்த காலத்தில் With Out DL. CR Issued. No,A770837 என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சா.சா.ஆ.2 மற்றும் எ.ம.சா.ஆ.1 ஆவணங்களின் படி முதல் எதிர்மனுதாரர் உரிய

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.30 19:57:18 +0530

ஓட்டுநர் உரிமம் இல்லாத நபரை, 18 வயதிற்குட்பட்ட இளவரை தனது வாகனத்தினை ஓட்ட அனுமதித்து பாலிசி விதி மீறல் செய்துள்ளதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**v)** எனவே, **<u>2011 ACJ 926 (SC) Kusum Lata Vs.Satbir)</u>** என்ற தீர்ப்புரையில் சொல்லப்பட்டுள்ளவாறு மனுதாரருக்குரிய இழப்பீட்டுத் தொகையை 2 ஆம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் செலுத்திவிட்டு, பின்னர் வாகன உரிமையாளரான முதல் எதிர்மனுதாரரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டுமென்று பிரச்சனை எண்.2 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**<u>09. பிரச்சனை எண்.3 :-</u>**

i) ஏற்கனவே பிரச்சினை எண்.1, 2-ல் மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்திற்கு 1 ஆம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனரின் அதிவேகம், அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு தான் காரணம் என்றும், 1, 2 எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களுக்கு இழப்பீட்டுத் தொகை செலுத்த கடமைப்பட்டுள்ளார்கள் என்றும், விபத்து சமயத்தில் 1 ஆம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனருக்கு செல்லத்தக்க ஓட்டுனர் உரிமம் இல்லாததால் 2 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீட்டுத் தொகையை செலுத்திவிட்டு பின்னர் வாகன உரிமையாளரான முதல் எதிர்மனுதாரரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் அடுத்ததாக எவ்வளவு இழப்பீட்டுத்தொகை மனுதாரருக்கு கிடைக்கக்கூடியது என்று தீர்மானிக்க வேண்டியது அவசியமாகிறது.

ii) மனுதாரர் இவ்விபத்தினால் தூக்கி எறியப்பட்டு மனுதாரருக்கு 1. Intraparenchymal hematoma with surrounding edema in left frontal lobe, 2. Tiny petechial hemorrhagi contusions in left mesial temporal lobe, 3. Subarachnoid hemorrhage in left cerebral sulci, 4. Subarachnoid hemorrhage in right fronto parietal sulci, 5. Bleed in both lateral ventricles & basal cisterns 6. Bleed in interhemispheric fissure & bilateral tentorial regions. 7. Subdural hemorrhage in left fronto-temporo-parietal convexity. 8. Bleed in both lateral ventricles, & basal cisterns, 9. Subcentrimetric hemangioma in left lobe of liver, 10. Multiple serious abrasions all over the body ஆகிய காயங்கள் ஏற்பட்டு, மனுதாரரின் சகோதரர் ராஜசேகர்

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.30 19:57:26 +0530

மற்றும் மனுதாரரின் மகன் சூரியமூர்த்தி ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று, உயிருக்கு போராடிக் கொண்டு மயங்கிய நிலையில் இருந்த மனுதாரரை அங்கிருந்தவர்கள் உதவியுடன் குத்தாலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று, அங்கு முதல் உதவி சிகிச்சை பெற்று பின்னர், தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனைக்கு கொண்டு சென்று அங்கு மனுதாரர் 25.1.2021 முதல் 17.2.2021 வரை உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்றதாகவும், உடல் நிலை மோசமானதால் அவரை mechanical ventilator வைத்து சிகிச்சை செய்து 27.1.2021 அன்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, பின்பு மருத்துவமனையிலிருந்து விடுவிக்கபட்டுள்ளார் என்பது ம.சா.ஆ.3 டிஸ்சார்ஜ் சம்மரி மூலம் தெரிய வருகிறது.

**I) பகுதிநேர ஊனம் (For Partial Permanent Disability)**

நமது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் **M.Chinnathambi Vs National Insurance Company Limited** வழக்கில் **CMA No.4645/19** தேதி 10.01.2020 என்ற உத்தரவில் ஊனச்சான்றிதழின் அடிப்படையில் பகுதிநேர ஊனத்தின் அளவை எவ்வாறு கணக்கிட வேண்டும் என்று கீழ்கண்டவாறு கூறியுள்ளது.

| Sl. No. | Year of Accident | Percentage | Amount (Rs.) |
|---|---|---|---|
| 1 | Before 2014 | 1% | Rs.3000/- |
| 2 | 2014-2015 | 1% | Rs.4000/- |
| 3 | 2016 onwards | 1% | Rs.5000/- |

மேலும் மனுதாரருக்கு மேற்படி விபத்தினால் ஏற்பட்ட காயங்களினால் Permanent Disability ஏற்பட்டதாகவோ Functional Disablement ஏற்பட்டதாகவோ, அதனால் அவரது அன்றாட வாழ்க்கை மற்றும் Earning Capacity பாதிக்கப்பட்டதாகவோ எவ்வித ஆவணங்களும் இல்லை. மேலும் மனுதாரருக்கு பகுதிநேர நிரந்தர ஊனம் ஏற்பட்டதாக தெரியவருகிறது. எனவே, மேற்படி முன்னோடி தீர்ப்பை பின்பற்றி மனுதாரரின் பகுதி நேர நிரந்தர ஊனத்திற்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டுத் தொகையை கருத்தில் கொண்டு பார்க்கும்போது ...

நமது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ***N.Sivakumar Vs The Managing Director Tamil Nadu State Transport Corporation, என்ற வழக்கில் CMA No.2202/23 தேதி***

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.30 19:57:35 +0530

***10.01.2020 என்ற உத்தரவில் ..***

***Future General India Insurance Comp. Ltd., (Cited Supra) Wherein, a sum of Rs.7,000/- is fixed towards per percentage of disability in respect of a claim made by the claimant for having sustained injuries in the accident occured in the year 2018 என்ற முன்னோடி தீர்ப்பின் அடிப்படையில் 1 சதவிகித ஊனத்திற்கு ரூ.7,000/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே*** 1 சதவிகித ஊனத்திற்கு மேற்படி முன்னோடி தீர்ப்பின் அடிப்படையில் ரூ.7,000/- வீதம் 10% சதவிகித ஊனத்திற்கு 10% × ரூ.7,000/- = ரூ.70,000/- வழங்கலாம் என்று தீர்வுகாணப்படுகிறது.

**ii) வலி மற்றும் வேதனை (pain and Sufferings, mental agony):-**

மனுதாரர் இவ்விபத்தினால் குத்தாலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டு, அங்கு முதல் உதவி சிகிச்சை பெற்று பின்னர், தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனைக்கு கொண்டு சென்று அங்கு மனுதாரர் 25.1.2021 முதல் 17.2.2021 வரை உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்றநிலையில் உடல் நிலை மோசமானதால் அவரை mechanical ventilator வைத்து சிகிச்சை செய்து 27.1.2021 அன்று அறுவை சிகிச்சை செய்து காப்பாற்றினார்கள் என்றும், அதன்பின்னர் இன்றுவரை 10 நாட்களுக்கு ஒரு முறை அந்த மருத்துவமனை சென்று வெளி நோயாளியாக சிகிச்சை பெற்று வருகிறார் என்றும், மருத்துவ செலவாக இதுவரை சுமார் ரூபாய்.15,00,000/- வரை செலவாகி உள்ளதாகவும், மனுதாரருக்கு ஏற்பட்ட தலைக்காயம் மற்றும் பிற காயங்களுக்கு உரிய அறுவை சிகிச்சை அளித்த போதிலும் இன்னும் அவர் தனியாக நடந்து செல்ல இயலவில்லை என்றும், பிறர் உதவியின்றி நடமாட இயலாத நிலையில் உள்ளார் என்றும், இன்று வரை அரசு பணிக்கு சென்று அவரது பணியினை செய்ய இயலாத நிலையில் உள்ளார் என்றும், மனுதாரருக்கு இந்த விபத்தின் மூலம் நிரந்தர ஊனமும், வருமான இழப்பும் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள சங்கதிகளை கருத்தில் கொண்டு பார்க்கும்போது **மனுதாரருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்காக ரூ.1,00,000/-மும், வசதி வாய்ப்பு இழப்பிற்காக ரூ.75,000/-மும் வழங்க இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.** மேலும், அவர் விபத்து சமயத்தில் ஏற்பட்ட காயத்தின் காரணமாக

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.30 19:57:42 +0530

சத்துள்ள ஆகாரங்கள் மற்றும் ஊட்டச்சத்துணவுகளை உட்கொண்டிருக்க வேண்டும். எனவே **ஊட்டச் சத்துணவிற்காக ரூ.10,000/− வழங்க இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.** மேலும், மனுதாரர் மருத்துவமனையில் உள்நோளியாக இருந்த சமயத்தில் கட்டாயம் அவருடன் இருந்து அவரை கவனித்துக்கொள்ள உதவியாளர் இருந்திருக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு **உதவியாளருக்கான செலவிற்காக ரூ.10,000/− வழங்க இந்தத் தீர்ப்பாயம் முடிவுசெய்கிறது.** போக்குவரத்து செலவைப் பொருத்து ஆவணங்கள் தாக்கல் செய்யப்படாவிட்டாலும், மனுதாரர் உள்நோயாளியாக மேற்கொண்ட சிகிச்சை மற்றும் தொடர் சிகிச்சை ஆகியவற்றை கருத்தில்கொண்டு மனுதாரருக்கு **போக்குவரத்து செலவிற்காக ரூ.10,000/− வழங்க இந்தத் தீர்ப்பாயம் முடிவுசெய்கிறது.**

**iii) உத்தேச வருமாணம் (Notional Income) மற்றும் தற்காலிக வருமான இழப்பு (For Temporary Loss of Income)**

மனுதாருக்கு விபத்தின் போது 54 வயது என்றும், அவர் அரசு பணியின் மூலம் மாதம் ரூபாய்.74,458/−சம்பளமாக பெற்று வந்தார் என்றும், சொந்தமாக சாகுபடி செய்து, சராசரியாக மாதம் ரூபாய்.5000/−வரை வருமானம் ஈட்டி தனது குடும்பத்தினை காப்பாற்றி வந்ததாகவும், அவருக்கு திருமண வயதில் வாரிசுகள் உள்ளதாகவும், இவரது குடும்பத்தில் வருமானம் ஈட்டக் கூடிய வேறு நபர்கள் யாரும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். மனுதாரர் தரப்பில் கடைசியாக அவர் பெற்ற 2021 செப்டம்பர் மாதத்திற்கான மாத ஊதிய பட்டியல் கணினி நகல் ரூ.74,458/− பெற்று வந்ததாக தாக்கல் செய்துள்ளார். மனுதாரரை 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது ***குத்தாலம் பஞ்சாயத்து யூனியனில் ஓட்டுநராக நிரந்தர வேலையில் பணியாற்றி வருகிறேன், பணிகாலத்தில் மருத்துவ விடுப்பு 2 ஆண்டுகள் ஊதியத்தோடு உண்டு என்றால் சரிதான், மருத்துவ விடுப்பு எடுத்த நாட்களுக்கு ஊதியம் பெற்றுள்ளதால் வருமான இழப்பு இல்லை என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே மேற்படி தலைப்பின் கீழ் வருமான இழப்பிற்காக*** **அவருக்கு கிடைக்கக்கூடிய தொகை எதுவும் இல்லை என்று இத் தீர்ப்பாயம் முடிவு செய்கிறது**.

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.30 19:57:49 +0530

**<u>iv) மருத்துவ செலவு (Medical Bills) :-</u>**

மனுதாரர் சிகிச்சையில் இருந்தபோது மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்ட வகையிலும், மருந்துகள் உட்கொண்ட வகையிலும் மருத்துவ பில்கள் ம.சா.ஆ,6 ஆக ரூ.8,32,466/- தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி தலைப்பின் கீழ் ***ம.சா.ஆ,6 ல் கண்டுள்ள ரூ.8,32,466/- இத்தொகை மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்று இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.***

**<u>v) எதிர்கால மருத்துவ செலவு (Future Medical Expenses):-</u>**

எதிர்கால செலவு குறித்து ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும், மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயங்களை கருத்தில் கொண்டும், அறுவை சிகிச்சை செய்யப்பட்ட பின்பும் 10 நாட்களுக்கு ஒருமுறை மருத்துவ பரிசோதனை செய்துவருவதாக குறிப்பிட்டுள்ளதை கருத்தில் கொண்ம் ***எதிர்கால செலவிற்காக ரூ.5,000/- வழங்க இந்தத் தீர்ப்பாயம் முடிவுசெய்கிறது.***

**10. கீழ்கண்ட பட்டியலின் கீழ் இழப்பீட்டுத்தொகை கணக்கிடப்படுகிறது.**

| **வ. எண்** | **தலைப்பு** | | **இழப்பீட்டுத் தொகை** |
|---|---|---|---|
| 1. | பகுதிநேர ஊனம் (For Partial Permanent Disability) 7000X10%= Rs.70,000/- | ரூ. | 70,000/- |
| 2. | வலி மற்றும் வேதனைக்கு இழப்பீடாக (pain and Sufferings, mental agony) | ரூ. | 1,00,000/- |
| 3. | வசதி வாய்ப்பு இழப்பிற்காக (Loss of Amenities) | ரூ. | 75,000/- |
| 4. | ஊட்ட சத்துணவு செலவிற்காக (Extra Nourishment) | ரூ. | 10,000/- |
| 5. | உதவியாளர் செலவு ( Attender Charges) | ரூ. | 10,000/- |
| 6. | போக்குவரத்து செலவிற்காக | ரூ. | 10,000/- |
| 7. | உத்தேச வருமானம் (Notional Income) மற்றும் தற்காலிக வருமான இழப்பு (For Temporary Loss of Income) | ரூ | - NIL- |
| 8. | மருத்துவசெலவு (Medical Bills) | ரூ. | 8,32,466/- |
| 9. | எதிர்கால மருத்துவ செலவு (Future Medical Expenses) | ரூ. | 5,000/- |
| | **மொத்தம்** | **ரூ.** | **11,12,466/-** |

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.30 19:57:58 +0530

ஆக மொத்தம் மனுதாரருக்கு மொத்த இழப்பீட்டுத் தொகையாக ***ரூ.11,12,466/–(ரூபாய்.பதினோரு லட்சத்து பன்னிரண்டாயித்து நானூற்று அறுபத்து ஆறு மட்டும்)*** கிடைக்கத்தக்கது என்று முடிவு செய்யப்படுகிறது.

**<u>11. பிரச்சனை எண்.4 :–</u>**

மனுவின் செலவுத்தொகை மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்றும் வேறு பரிகாரம் எதுவும் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் பிரச்சனை எண்.4–க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**12.** i) முடிவில், இம்மனு பகுதியாக மனுதாரரின் செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, 2 ஆம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு மொத்த இழப்பீட்டுத் தொகையாக ***ரூ.11,12,466/–(ரூபாய்.பதினோரு லட்சத்து பன்னிரண்டாயித்து நானூற்று அறுபத்து ஆறு மட்டும்)*** கொடுக்க வேண்டும்மென்று உத்தரவிடப்படுகிறது.

ii) மேற்படி இழப்பீட்டு தொகைக்கு மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் செலுத்தப்படும் நாள் வரை மனுதாரரின் தவறுகையால் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கும் காலம் தவிர 7.5 % சதவிகிதம் ஆண்டு வட்டி சேர்த்து இந்த உத்தரவு தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

iii) மேற்படி இழப்பீட்டுத் தொகையை 2–ம் எதிர்மனுதாரர் நிறுவனம் செலுத்திவிட்டு பின்னர் வாகன உரிமையாளரான முதல் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக்கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. **(Pay and Recovery is ordered).**

v) மேற்படி இழப்பீட்டுத் தொகையை 2 ஆம் எதிர்மனுதாரர் மயிலாடுதுறை பாரத மாநில வங்கி கிளையில் உள்ள இந்த மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாய கணக்கு எண்.42800964666–ல் செலுத்த வேண்டும் மென்றும், செலுத்திய விபரத்தை இந்நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப் படுகிறது. மனுதாரர்/உரிமைகோருபவர் மோட்டார் வாகன விபத்து கோருரிமைத்

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.30 19:58:05 +0530

தீர்ப்பாயத்திலிருந்து NEFT or RTGS மூலம் வட்டியுடன் சேர்ந்த அவரது முழு இழப்பீட்டு தொகையை வங்கியில் திரும்பப்பெற அனுமதிக்கப்படுகிறார்.

v) பாக்கி நீதிமன்றக் கட்டணம் ரூ.10,122/- யை மனுதாரர் இன்றைய தேதியிலிருந்து பத்து நாட்ளுக்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது.

வழக்குரைஞர் கட்டணம் ரூ.28,625/- என நிர்ணயம் செய்யப்படுகிறது.

இவ்வுத்திரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ஆம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.30 19:58:12 +0530

மோட்டார் வாகன விபத்து உரிமை கோரிக்கை தீர்ப்பாய நீதிபதி,
முதன்மை சார்பு நீதிபதி, மயிலாடுதுறை.

**<u>Particulars provided as per the Judgment of Hon'ble Madras High Court in M/S Cholamandalam MS Genl Ins.Co.Ltd., - Vs- Mr.Ayyanar, Tr.C.M.P.No.264 to 2020, dated 11.05.2020 என்ற உத்தரவின் படி தனியாக தீர்ப்பாணை தயாரிக்கப்படவில்லை</u>**

***MCOP No.01/2022***

| | | |
|---|---|---|
| 1. | (Name and Address of the Claimant)<br>(மனுதாரர்களின் பெயர் மற்றும் விலாசம்) | கார்த்திகேயன், வயது 54,<br>த.பெ. சம்பந்தமூர்த்தி<br>எண்.2/242, அக்ரஹாரம், காளி கிராமம்,<br>மயிலாடுதுறை தாலுக்கா,<br>மயிலாடுதுறை டி.மு.இலாகா. |
| 2. | Name and Address of the Respondents<br>(எதிர்மனுதாரர்களின் பெயர் மற்றும் விலாசம்) | 1. கண்ணகி, க.பெ.சேட்டு,<br>எண்.75, செஞ்சிவீரன் கோயில் தெரு,<br>திருமங்கலம்,<br>மயிலாடுதுறை தாலுக்கா,<br>மயிலாடுதுறை டி.மு.இலாகா.<br><br>2. கிளை மேலளார்,<br>ரிலையன்ஸ் ஜெனரல் இன்சூரனஸ் கம்பெனி,<br>அண்ணா நகர் (மேற்கு),<br>எண்.12/2035, 15 வது பிரதான சாலை, |

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.30 19:58:19 +0530

| | | |
|---|---|---|
| | | 4 வது தெரு, எச். பிளாக், சென்னை 600 101. |
| 3. | Date of Filing of the Claim Petition (மனுதாக்கல் செய்யப்பட்டநாள்) | 17.12.2021 |
| 4. | Date of Award (உத்தரவு பகரப்பட்ட நாள்) | 30.03.2026 |
| 5. | Amount of Award (வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை) | ***ரூ.11,12,466/-(ரூபாய்.பதினோரு லட்சத்து பன்னிரண்டாயித்து நானூற்று அறுபத்து ஆறு மட்டும்)*** |
| 6. | Interest Rate Applicable | 7.5% |
| 7. | Date from which interest is payable (எந்த நாளிலிருந்து வட்டி வழங்கப்படவேண்டும்) | மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் செலுத்தப்படும் நாள் வரை (மனுதாரரின் தவறுகையால் தள்ளுபடி செய்யப்பட்ட காலம் தவிர்த்து) வட்டி வழங்க உத்தரவிடப்படுகிறது Dismissed for default period நீங்கலாக) |
| 8. | Costs if any | 2-ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலவுத் தொகையான ரூ.**39,391/-யை** கொடுக்க வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது.<br>2 ஆம் எதிர்மனுதாரருக்கு இம்மனுவில் ஏற்பட்ட செலவுத்தொகை ரூ.12,210/-யை அவரே ஏற்கவேண்டும்.<br>**(Stamp Duty of Rs.10,497.16-375= Rs.10,122.16 @ Rs.10,122/- The petitioner Shall pay the balance Court fee of Rs.10,122/- within 10 days.** |

| **Particulars of costs** | | |
|---|---|---|
| **For Petitioner** | | **For Respondent:** |
| | **Rs.** | **Rs.** |
| Court fee Rs.10,497.16-375= Rs.10,122.16 @ Rs.10,122/- | 10,497.00 | -- |
| Stamp in Vakalath | 10.00 | 10.00 |
| Fee for services of process | 19.00 | -- |

SUDHA P
Digitally signed by SUDHA P
Date: 2026.03.30 19:58:26 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | | Stamp on Exhibits | 40.00 | -- |
| | | Typing charge | 200.00 | 200.00 |
| | | Advocate fee | 28,625.00 | 12,000.00 |
| | | **Total** | **39,391.00** | **12,210.00** |

| | | |
|---|---|---|
| 9. | The Mode and manner of deposit of Compensation (இழப்பீட்டுத் தொகையை வைப்பீடு செய்யப்படும் வழிமுறை) | **முடிவாக, இம்மனு கீழ்கண்டவாறு பகுதியாக செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.**<br><br>i) 2 ஆம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு மொத்த இழப்பீட்டுத் தொகையாக ***ரூ.11,12,466/-(ரூபாய்.ப தினோரு லட்சத்து பன்னிரண்டாயித்து நானூற்று அறுபத்து ஆறு மட்டும்)*** கொடுக்க வேண்டும்மென்று உத்தரவிடப்படுகிறது.<br><br>ii) மேற்படி இழப்பீட்டு தொகைக்கு மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் செலுத்தப்படும் நாள் வரை மனுதாரரின் தவறுகையால் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கும் காலம் தவிர 7.5 % சதவிகிதம் ஆண்டு வட்டி சேர்த்து இந்த உத்தரவு தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.<br><br>iii) மேற்படி இழப்பீட்டுத் தொகையை 2-ம் எதிர்மனுதாரர் நிறுவனம் செலுத்திவிட்டு பின்னர் வாகன உரிமையாளரான முதல் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக்கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. **(Pay and Recovery is ordered).**<br><br>iv) மேற்படி இழப்பீட்டுத் தொகையை 2 ஆம் எதிர்மனுதாரர் மயிலாடுதுறை பாரத மாநில வங்கி கிளையில் உள்ள இந்த மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாய கணக்கு எண்.42800964666-ல் செலுத்த வேண்டும் மென்றும், செலுத்திய விபரத்தை இந்நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் / உரிமைகோருபவர் மோட்டார் வாகன விபத்து கோருரிமைத் தீர்ப்பாயத்திலிருந்து NEFT or |

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.30 19:58:34 +0530

| | | |
|---|---|---|
| | | RTGS மூலம் வட்டியுடன் சேர்ந்த அவரது முழு இழப்பீட்டு தொகையை வங்கியில் திரும்பப்பெற அனுமதிக்கப்படுகிறார்.<br><br>v) பாக்கி நீதிமன்றக் கட்டணம் ரூ.10,122/- யை மனுதாரர் இன்றைய தேதியிலிருந்து பத்து நாட்ளுக்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது.<br><br>வழக்குரைஞர் கட்டணம் ரூ.28,625/- என நிர்ணயம் செய்யப்படுகிறது. |
| 10. | The Mode and manner of Disbursement<br>(மேற்படி இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் வழிமுறை) | Through *NEFT / RTGS* |
| 11. | Date of payable Balance Court Fee<br>(பாக்கி நீதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டிய நாள்) | பாக்கி நீதிமன்றக் கட்டணத்தை மனுதாரர் இன்றைய தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது. |

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.30 19:58:41 +0530

மோட்டார் வாகன விபத்து உரிமை கோரிக்கை தீர்ப்பாய நீதிபதி,
முதன்மை சார்பு நீதிபதி, மயிலாடுதுறை.

**1. மனுதாரர் தரப்பு சாட்சிகள் :-**

ம.சா.1 – திரு. கார்த்திகேயன்

**2. மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :-**

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ1 | – | 26.01.2021 | முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | – | 26.01.2021 | மதுரை மீனாட்சி மருத்துவமனையின் விபத்து பதிவேடு |
| ம.சா.ஆ.3 | – | 17.02.2021 | மதுரை மீனாட்சி மருத்துவமனையின் விடுப்பு சான்று |
| ம.சா.ஆ.4 | – | 23.07.2015 | 1 ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு புத்தகம் நகல் |
| ம.சா.ஆ.5 | – | 28.07.2020 | 1 ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு சான்று நகல் |
| ம.சா.ஆ.6 | | 2021 | மருத்துவ ரசீதுகள் |

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.30 19:58:48 +0530

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.7 | -- | மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் |
| ம.சா.ஆ.8 | -- | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் |
| ம.சா.ஆ.9 | 2021 செப்டம்பர் | மனுதாரரின் ஊதிய சீட்டு 2021 செப்டம்பர் மாதத்தின் கணினி நகல் |

**3. எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் :-**

| | |
|---|---|
| எ.ம.சா.1 | அலமேலுமங்கை வட்டார போக்குவரத்து அலுவலக தட்டச்சர் |
| எ.ம.சா.1 | உதயசூரியன் 2 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் சட்ட மேலாளர் |

**4. சாட்சிய சான்றாவணங்கள் :-**

| | | |
|---|---|---|
| சா.சா.ஆ.1 | – 28.03.2025 | சாட்சியம் அளிக்க வழங்கிய அனுமதி கடிதம் |
| சா.சா.ஆ.2 | – 05.02.2021 | TN 05 BB 3411 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல் |

**5. எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :-** இல்லை

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | – 05.02.2021 | TN 05 BB 3411 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல் |
| எ.ம.சா.ஆ.2 | – 03.08.2020 | 2 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் பாலிசி மற்றும் சட்டத்திட்டங்களின் நகல் |
| எ.ம.சா.ஆ.3 | – -- | 1 ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுனரின் ஆதார் அடையாள அட்டை நகல் |

**6. நீதிமன்றச் சான்றாவணம் :-**

நீ.ம.சா.ஆ 1 – 21.08.2025 ஊனச்சான்று

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.30 19:58:55 +0530

மோட்டார் வாகன விபத்து உரிமை கோரிக்கை தீர்ப்பாய நீதிபதி,
முதன்மை சார்பு நீதிபதி, மயிலாடுதுறை.

Draft/Fair Order
MCop No.01-2022
Date: 30.03.2026.